## ரூ.4.96 கோடி மதிப்பில்

# நவீன மீன் அங்காடி - திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே.8-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிந்தாதிரிப் பேட்டையில் 2.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன மீன் அங்காடியினையும், டாக்டர் பெசன்ட் சாலையில் 2.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மையக் கட்டடத்தினையும் திறந்து வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.5.2025) சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டையில் 2.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன மீன் அங்காடியினையும், டாக்டர் பெசன்ட் சாலையில் 2.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மையக் கட்டடத்தினையும் திறந்து வைத்தார்.

சென்னை மாநகரின் மீன் விற்பனையில் சிந்தாதிரிப்பேட்டை மீன் அங்காடி முக்கிய இடத்தை பெற்றுள்ளது. பொதுமக்கள் அதிக அளவில் வருகை தருவதால் சிந்தாதிரிப்பேட்டை, ஜோதியம்மாள் நகரில் நவீன மீன் அங்காடி சிங்கார சென்னை 2.0 திட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதி ஆகியவற்றின் கீழ் 2.92 கோடி ரூபாய் மதிப்பில் 82 கடைகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கட்டடமானது, புயலினால் சேதமடையாமல் இருக்கும் வகையில் டென்சைல் கட்டுமானத்துடன் கூடிய மேற்கூரை, மீன் கழிவுகளை வெளியேற்றும் வகையில் 28 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சேகரிப்புத் தொட்டி, குப்பைகளை எளிதாக அகற்றுவதற்கான அமைப்புகள் மற்றும் வழிகாட்டிப் பலகைகள், 10,555 லிட்டர் கொள்ளளவு கொண்ட பயோ டைஜஸ்ட் அமைப்பு, மீன் கழிவுநீரினை பயோ டைஜிஸ்ட்க்கு கொண்டு செல்லும் தனி வடிகால் மற்றும் வாகன நிறுத்தம், கழிவறைகள் உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

திருவல்லிக்கேணி டாக்டர் பெசன்ட் சாலையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையக் கட்டடமானது சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி 1.05 கோடி ரூபாய், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.அந்தியூர் செல்வராஜ் அவர்களின் மேம்பாட்டு நிதி 50 இலட்சம் ரூபாய், திருமதி கனிமொழி என்.வி.என். சோமு அவர்களின் மேம்பாட்டு நிதி 49 இலட்சம் ரூபாய் என மொத்தம் 2.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,800 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது.

தரைத்தளம் பிரிவு-1ல், 30 நபர்கள் பயன்பெறும் வகையில் தையல் மற்றும் ஆரி வேலைப்பாடுகளுடன் கூடிய பயிற்சி வகுப்புகள் முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளது. தரைத்தளம் பிரிவு-2ல், 30 நபர்கள் பயன்பெறும் வகையில் அழகுக்கலை பயிற்சி வகுப்புகள் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

முதல் தளம் பிரிவு-3ல், 30 நபர்கள் பயன்பெறும் வகையில் கணினி மற்றும் டேலி (Computer and Tally) பயிற்சி வகுப்புகள் இலவசமாக நடத்தப்படவுள்ளது. இந்த பயிற்சி வகுப்புகளில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல் தளம் பிரிவு-4ல், பட்டம் பெற்று வேலையின்றி இருக்கும் இளைஞர்களுக்கான தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம் இலவசமாக செயல்படவுள்ளது. இந்த மையத்தில் இளைஞர்களின் திறனை மேம்படுத்தி எவ்வித நேர்முகத் தேர்வையும் எதிர் கொள்ள பயிற்சிகள் வழங்கப்படும்.

ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மையக் கட்டடத்தினை திறந்து வைத்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர்களுக்கு போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதையும், கணினி பயிற்சி வகுப்புகள், பெண்களுக்கு அழகுக் கலை, தையல் பயிற்சி, துணிகளில் கலைத்திறன் பயிற்சிகள் அளிக்கப்படுவதையும் நேரில் பார்வையிட்டு அவர்களுடன் பயிற்சி குறித்து உரையாடினார்.

இந்நிகழ்ச்சிகளில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், அந்தியூர் செல்வராஜ், திருமதி கனிமொழி என்.வி.என். சோமு, துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ்.மதன்மோகன், பி.ஸ்ரீராமுலு, மாமன்ற ஆளுங் கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், மாமன்ற உறுப்பினர் ரா.ஜெகதீசன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெயச்சந்திர பானு ரெட்டி, துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்திய வட்டாரம்) மற்றும் அரசு அலுவலர்கள், மீனவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.5.2025) திருவல்லிக்கேணி டாக்டர் பெசன்ட் சாலையில் ரூ.2.04 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மையக் கட்டடத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி கனிமொழி என்.வி.என். சோமு, துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயச்சந்திர பானு ரெட்டி, துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, கே.ஜெ.பிரவீன் குமார், மற்றும் அலுவலர்கள், இளைஞர்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.5.2025) நிருவல்லிக்கேணி டாக்டர் பொண்ட் சாலையில் ரூ.204 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மையக் கட்டடத்தினை நிறத்து வைத்தும் கணினி பயிற்சி பெறுபவர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவா டி.ஆர்.பி.எம். காமராஜ், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெயச்சந்திர பானு ரெட்டி, துணை ஆணையாளர்கள் வி. சிவகிருஷ்ணமூர்த்தி, கே.ஜெபிரவின் குமார், மற்றும் அலுவலர்கள், இளைஞர்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.

## விடுதலைப் போராட்ட வீரர்

# வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவிப்பு!

*சென்னை, மே 9-*

*தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு, அவரது பெருமைகளைப் போற்றி அமைச்சர் பெருமக்கள் இன்று (9.5.2025) காலை 9.30 மணியளவில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.*

*வீரபாண்டிய கட்டபொம்மன், ஜெகவீர கட்டபொம்மு மற்றும் ஆறுமுகத்தம்மாள் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர். இவர் முப்பது வயது வரை தந்தை ஜெகவீர கட்டபொம்மு பாளையக்காரராக இருந்து வந்ததால் தந்தைக்கு உதவியாக இருந்தார். அவருக்குப் பின் கட்டபொம்மன் 1790 ஆம் ஆண்டு பிப்ரவரி 2ஆம் தேதி, 47வது பாளையக்காரராகப் பொறுப்பேற்றார்.*

*வீரபாண்டிய கட்டபொம்மனிடம் வரி கேட்டு வந்த வெள்ளையர்களை எதிர்த்து வரி கொடுக்க மறுத்தார். அதனால் ஏற்பட்ட பகைக்காரணமாக வெள்ளையருடன் போரிட்டு இறுதியில் ஆங்கிலேயத் தளபதி பானர்மென் உத்தரவின் படி, அக்டோபர் 16ஆம் தேதி, 1799 ஆம் ஆண்டில் கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனின் தியாகத்தைப் போற்றி, அழிக்கப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மனின் கோட்டையை பாஞ்சாலங்குறிச்சியில் மீண்டும் கட்டி எழுப்பி 18.8.1974 அன்று திறந்து வைத்தார். அத்துடன் கட்டபொம்மனின் 204 வழித் தோன்றல்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து நிலப் பட்டா, மனைப்பட்டாக்களையும் வழங்கினார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் 14.4.2023 அன்று கட்டபொம்மன் திருவுருவச் சிலையை அமைத்து, "வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உரத்த குரல் எழுப்பிய போர் மறவன் வீரபாண்டிய கட்டபொம்மன்" எனக் கல்வெட்டில் பொறித்துப் பாராட்டியுள்ளார்.*

*தமிழ்நாடு அரசின் சார்பில் தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியிலும், சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்திலும் அமைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைகளுக்கு, அவரது வீர உணர்வுகளைப் போற்றி ஆண்டுதோறும் சிறப்புகள் செய்யப்படுகின்றன.*

*அதன்படி, இந்த ஆண்டின் சித்திரைத் திங்கள் கடைசி வெள்ளிக்கிழமையான இன்று (9.5.2025) காலை வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைகளுக்கு அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்திச் சிறப்பிக்கிறார்கள்.*

